Registered as a News Paper in Sri Lanka. பக்கங்கள்: 04 விலை ரூபா: 4-50

# ஈழநாதம்

THE EELANAATHAM Peoples Daily மக்கள் தினசரி

நாதம்: 02 திருவள்ளுவர் ஆண்டு 2022 ஆடி 16 (01 - 08 - 1991) வியாழக்கிழமை ஓசை: 164

## பரீட்சை வினாத்தாள் யாழ். வந்துசேரவில்லை

(நல்லூர்)

கல்விப் பொதுத் தராதர (உ/த) பரீட்சைக்கான பாட வினாத்தாள்கள் நேற்றுவரை யாழ்ப்பாணம் வந்து சேரவில்லை. நேரசூசிகையின்படி பரீட்சை நாளை மறுதினம் ஆரம்பமாகவுள்ளது குறிப்பிடத்தக்கது.

இப்பரீட்சை வினாத்தாள்கள், அனுமதி அட்டை மற்றும் (4ஆம் பக்கம் பார்க்க)

# இராணுவ முன்னேற்றம் முறியடிப்பு:

# கடல் நீரேரியில் தொடர்ந்து சண்டை

(யாழ்ப்பாணம்)

வாடியடி, கடல்நீரேரிப் பகுதியில் நேற்று காலையிலிருந்து புலிப்படை வீரர்களுக்கும், சிங்கள இராணுவத்தினருக்கும் மத்தியில் தொடர்ந்து மோதல்கள் நடைபெற்று வருவதாகவும், புலிகளின் எதிர்த்தாக்குதல் காரணமாக இராணுவத்தினரின் முன்னேற்றம் தடுத்து நிறுத்தப்பட்டதாகவும் களத்திலிருந்து பெறப்பட்ட செய்திகள் கூறுகின்றன.

ஆனையிறவு தளத்தைச் சூழவுள்ள புலிகளின் முற்றுகைக் காவல் அரண்களை உடைத்து முன்னேறுவது இலகுவான காரியமல்ல என்றும், இந்த முயற்சியில் இராணுவத்தினர் புலிகளின் கடுமையான எதிர்ப்பை சந்திப்பதுடன் பாரிய உயிர்ச்சேதத்தையும் எதிர்கொள்ள வேண்டிவரும் என்றும் புலிப்படைத் தளபதி ஒருவர் கூறினார். அப்படித்தான் இராணுவத்தினர் தமது முழுப் பலத்தையும் பிரயோகித்து ஆனையிறவுத் தளத்திற்குள் புகுந்தாலும் ஏழு மைல் தூர கடலமார்க்கமான விநியோகத்தைத் தொடர்வது இலகுவான காரியமில்லை என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

## இந்தியா - சிறிலங்காவிற்கும் ஒரே வகையான ஆபத்து

— ஹரோல்ட் ஹெரத்

(டில்லி)

இந்தியாவும், சிறிலங்காவும் ஒரே அபத்துக்களை எதிர்நோக்குகின்றன என்று சிறிலங்கா வெளியுறவு அமைச்சர் ஹரோல்ட் ஹெரத் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் டில்லியில் இடம் பெற்ற விருந்துபசாரம் ஒன்றில் கலந்து கொண்டு பேசிய ஹெரத் இ (4ஆம் பக்கம் பார்க்க)

## புலிகள் இயக்கத்தை ஒதுக்கி விட்டுத் தீர்வு

— பிரேமதாசா

(கொழும்பு)

நீதியான, நீடித்த தீர்வொன்றின் மூலம் புலிகள் இயக்கத்தை தனிமைப்படுத்துவோம் என்று சிறிலங்காஜனாதிபதி பிரேமதாசா கூறியுள்ளார். அவர் மேலும் பேசுகையில் வடக்கு கிழக்குப் பிரச்சினைக்கு நீதியானதும் பெரும்பான்மையோர் ஏற்றுக் கொள்ளக் கூடியதுமான நீடித்த தீர்வொன்றைக் காண்பதன் மூலம் விடுதலைப்புலிகளைத் தனிமைப்படுத்தலாம் என அவர் தெரிவித்தார்.

## கடத்தல் பிடிபட்டது

கட்டுநாயக்கா சர்வதேச விமான நிலையத்திலிருந்து எழுபத்தைந்து லட்சம் ரூபா

(4 ஆம் பக்கம் பார்க்க)

## 2 கிலோமீற்றருக்கு அப்பால் இராணுவம் உள்ளது

(கொழும்பு)

ஒப்பரேசன் பலவேகய இராணுவ நடவடிக்கையில் ஈடுபட்டிருக்கும் சிறிலங்கா இராணுவத்தினர் ஆனையிறவு முகாமிலிருந்து இரண்டுகிலோ மீற்றர் தூரத்திற்கு அப்பால் இருப்பதாகச் சிறிலங்கா பாதுகாப்பு அமைச்சு கூறியுள்ளது.

மேலும் இந்த இராணுவத்தினர் ஆனையிறவு முகாமிற்கு நாற்பத்தெட்டு மணி நேரத்தினுள் சென்றடையலாம் என எதிர் பார்க்கப்படுவதாகவும், இராணுவத்தினர் தற்போது இருக்கும் இடத்திலிருந்து ஆனையிறவு இராணுவ முகாமின் தொலைத் தொடர்புக் கோபுரத்தைக் காணக்கூடியதாக இருப்பதாகவும், ஆனையிறவு முகாமினுள் முடங்கி (4 ஆம் பக்கம் பார்க்க)

## இராணுவம் மீது புலிகள் சிலாவத்துறையில் தாக்கு

(மன்னார்)

மன்னார் மாவட்டத்தில் உள்ள சிலாவத்துறை இராணுவ முகாமிலிருந்து முன்னேற முயன்ற சிறிலங்கா இராணுவத்தினர் மீது விடுதலைப் புலிகள் கடும் தாக்குதல் நடாத்தியுள்ளனர்.

வங்காலை, தள்ளாடி, சிலாவத்துறை ஆகிய மூன்று சிறிலங்கா இராணுவ முகாம்களில் இருந்து நேற்று முன் தினம் பொற்கேணி என்ற பகுதியை நோக்கி ஆட்லறி ஷெல் தாக்குதல் நடாத்தப் (4ஆம் பக்கம் பார்க்க)

## மீண்டும்

அநேக வாசகர்களின் வேண்டுகோளுக்கு இணங்க மீண்டும் ஆனையிறவு யுத்த களம் பற்றிய வரைபடம் நாளைய வெள்ளி மஞ்சரியில் வெளிவரும் என்பதை அறியத் தருகின்றோம். (ஆ-ர்)

## யுத்த முனைக்கு 300 உழவு இயந்திரங்கள்

(கொழும்பு)

ஆனையிறவு முகாம் மீதான முற்றுகையை முறியடிக்கச் சிறிலங்கா இராணுவத்துக்கு 300 உழவு இயந்திரங்கள் வடபகுதிக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாக சிறிலங்கா பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது.

'ஒப்பரேஷன் பலவேக'யில் இரண்டாம் கட்ட தாக்குதல்களில் கடந்த மூன்று நாட்களாக ஈடுபட்டிருக்கும் இராணுவத்தினரின் பயன்பாட்டுக் (4ஆம்பக்கம் பார்க்க)

## கார் குண்டு தயாரித்ததாக சாள்ஸ் தேடப்படுகின்றார்

(கொழும்பு)

கொழும்பு கூட்டுப்படை தலைமையக தாக்குதலுக்கு கார்க் குண்டை தயாரித்தவர் எனச் சொல்லப்படும் தமிழீழ விடுதலைப் புலிகளின் வெடிமருந்து நிபுணரான சாள்ஸ் என்று அழைக்கப்படும் ரவிசங்கரை சிறிலங்காவின் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் தேடுகின்றனர் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இவர் பற்றிய விபரங்களை கொழும்புப் பத்திரிகைகளில் தெரிவிக்கப்பட்டிருப்பதாகவும் குற்றப் புலனாய்வுப் பிரிவு தெரிவித்தது.

## வடக்கு உலர்உணவு விநியோகம் உடன் நிறுத்த உத்தரவு

(யாழ்ப்பாணம்)

வடக்கில் மூன்று மாவட்டங்களுக்கான உலர் உணவு விநியோகத்தை உடனடியாக நிறுத்துமாறு அத்தியாவசிய சேவைகள் நாயகம் அவசர செய்தி ஒன்றை சப்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அனுப்பி வைத்துள்ளார். மேற்படி அறிவித்தல் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கமூடாக நேற்று அனுப்பி வைக்கப்பட்டது.

இதன்படி இன்றுமுதல் மன்னார், கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகியமூன்று மாவட்டங்களுக்குமான சகல நிவாரணங்களும் நிறுத்தப்பட்டுள்ளன. இம்மாதம் முதல் மேற்படி மூன்று மாவட்டங்களிலும் செயல்பட்டு வரும் அகதிகள் பராமரிப்பு நிலையங்களுக்கு மட்டுமே உலர் உணவை விநியோகிக்கும்படியும் உத்தரவிடப்பட்டுள்ளது. (ச)

## 20 நாள் ஊரடங்கால் வடக்கில் பெரும் பஞ்சம்

- நவசமசமாஜக் கட்சி

(கொழும்பு)

வடமாகாணம் முழுவதையும் இருபது நாட்களுக்கும் மேலாக ஊரடங்குச் சட்டத்தில் அரசாங்கம் வைத்திருப்பதால் அங்கு பஞ்சமும் பட்டினியும் தலைவிரித்தாடுவதாக நவசமசமாஜக் கட்சி வெளியிட்ட அறிக்கையொன்றில் கூறப்பட்டுள்ளது.

அவ்வறிக்கையில் மேலும் (4ஆம் பக்கம் பார்க்க)

## இன்றுபோராட்டத்தில்இணையாதது நமக்கு நாம் செய்யும் துரோகம்

- பரா

(கரவெட்டி)

களத்தில் நிற்கும் போராளிகளை நாம் சந்தித்த போது அவர்கள் தங்கள் பெற்றோரைப்பற்றியோ தனிப்பட்ட தங்கள் விடயங்களையோ கேட்கவில்லை. போராட்டத்திற்கு பெருந்தொகையானவர்கள் வந்து இணைகின்றனரா? மக்கள் முழுமையாக ஆதரவளிக்கின்றனரா? என்றுதான் வினவினார்கள். என கரவெட்டி தேவரயாளி மகாவித்தியாலயத்தில் நடைபெற்ற மாணவர்களுக்கான கலந்துரையாடலின் போது விடுதலைப்புலிகளின் கொள்கை முன்னெடுப்புப் பொறுப்பாளர் பரா தெரிவித்தார்.

3 ஆம் பக்கம் பார்க்க)

## புதுக்காட்டுச்சந்தியில் நேபாம் குண்டுவீச்சு

(இயக்கச்சி)

இயக்கச்சிப் பகுதியில் தொடர்ந்து குண்டுவீச்சு நடத்திவரும் சிறிலங்கா விமானப்படை விமானங்கள் நேற்று வீசிய நேபாம் குண்டுகளால் புதுக்காட்டுச் சந்தியிலிருந்த கடை ஒன்றும் தீக்கிரையாகியது. மேலும் பல மரங்களும் பற்றைக் காடுகளும், வீடுகளும் நேபாம் குண்டு வீச்சுகளால் தீக்கிரையாகிப் பலத்த சேதமடைந்துள்ளன.

[4ஆம் பக்கம் பார்க்க]

வாய்ச்சம்பரம்

அனித்தா பயிற்சி நிலைய
மனையியல் கண்காட்சி
இம்மாதம் 9, 10, 11 ஆம் திகதிகளில் நடைபெறும்.
Cake Icing, Cookery, Hair Style, Handy Craft, Needle Work. (B-2882)


## நாளாந்தம் 25 ரூபா சம்பளம்

(நல்லூர்)

தொழில் நுட்பக் கல்லூரியில் பயின்று யாழ். கல்வித் திணைக்களத்திலும், கோட்டக்கல்வி அலுவலகங்களிலும் அமைய அடிப்படையில் தற்போது கடமைபுரியும் லிகிதர்கள், தட்டெழுத்தாளர்கள் ஆகியோருக்கு அவர்கள் கடமைபுரியும் நாட்களுக்கு நாளொன்றுக்கு ரூபா 25/- படி சம்பளம் வழங்க யாழ் கல்வித் திணைக்களம் முடிவு செய்துள்ளது.

இதனால் இவ்வாறு கடமை புரியும்ஊழியர்கள் பற்றிய விபரங்களை உடன் அனுப்பிவைக்குமாறு யாழ். பிரதேசக் கல்விப் பணிப்பாளர் சகல கோட்டக்கல்வி அதிகாரிகளையும் பணித்துள்ளார்.

இவர்களுக்குரிய சம்பளம் சுமார் ஆறுமாதம் வரை வழங்கப்படும்.

## திறப்புவிழா

அராலி

மாவீரன் லெப்டினன் சின்ன சுதா விளையாட்டரங்கு திறப்பு விழாவும் 45 ஆம் நாள் நினைவு அஞ்சலியும் இன்று பிற்பகல் 4.00 மணியளவில் நடைபெறவுள்ளது. தமிழீழ மக்கள் அனைவரையும் இதில் கலந்து கொள்ளுமாறு அராலி தெற்கு சிற்றூர் அவையினர் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

## சருகுகள் எழுமாயின் மாமலைகள் மண்ணாகும்

வயது போய்விட்டது என்றால்
எங்களுக்கு மானமுமா போய்விட்டது?
எங்களுடைய உதிரம் இன்னும் உறைந்துவிடவில்லை
இந்த மண்ணை நனைக்க இப்பொழுதும் ஈரமாக இருக்கின்றது

இந்தத் தன்மானப் போரிலே
பிஞ்சுகளெல்லாம் சருகும்பொழுது
சருகுகளுக்கு இனி என்ன உறக்கம்? சருகுகள் தாமே நாம்

இந்த மண்ணில் எல்லா சருகுகளும்
புயலோடு எழுந்தோமாயின்
மாமலைகளும் மண்ணாகும்
சரித்திரமே ஆட்டம் காணும்
முடிந்தால் ஒன்றாய் எழுந்திடுவோம்
மடிந்தால் மண்ணுக்கு உரமாவோம்.

(துணைப்படைப் பயிற்சிக்காகப் போர் முனைக்குச் சென்றுள்ள 48 வயதான தாய் திருமதி வே. இலங்காதேவி எழுதிய கவிதை)

## எறிகணைத் தாக்குதலால் மூன்று வீடுகள் சேதம்

(பொன்னாலை)

காரைநகரில் நிலைகொண்டிருக்கும் சிறிலங்கா இராணுவத்தினர் பொது மக்கள் வாழும் பகுதிகளை நோக்கி ஷெல் தாக்குதல் நடாத்தியதில் மூன்று வீடுகள் பலத்த சேதம் அடைந்துள்ளன.

நேற்று முன்தினம் முற்பகல் 11-30 மணியளவில் நடாத்தப்பட்ட இத்தாக்குதலில் பொன்னாலை பிரதான வீதியில் உள்ள பொது மக்களின் மூன்று வீடுகள் சேதமடைந்தன.

இப்பகுதி மக்கள் பதுங்கு குழிகளில் இருந்தமையால் உயிர் ஆபத்துக்கள் ஏற்படவில்லை. (க)

## கூட்டுறவு திணைக்கள புனரமைப்பு வேலைகள் துரிதப் படுத்தப்பட்டுள்ளன

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட கூட்டுறவுத் திணைக்களம் புனரமைப்பு வேலைகளைத் துரிதப்படுத்தியுள்ளது.

கடந்த காலங்களில் இந்திய, சிறிலங்கா இராணுவ நடவடிக்கைகளால் இத் திணைக்களத்திற்கு ஏற்பட்ட சேதங்களை புனரமைப்பதற்கான வேலைகள் யாவற்றையும் இந்த ஆண்டு இறுதிக்குள் பூர்த்தியாக்குவதற்கு மேற்படி திணைக்களம் துரித நடவடிக்கை எடுத்துள்ளது.

புனரமைப்பு வேலைகளுக்கு கூட்டுறவுத்துறை அமைச்சு வழங்கிய நிதியைப் பயன்படுத்தி இப்புனரமைப்பு வேலைகள் மேற்கொள்ளப்படவிருக்கின்றன. எனினும் யாழ் மாவட்டத்தில் இராணுவத்தின் பிடியில் சிக்கியிருக்கும் பகுதிகளில் புனரமைப்பு வேலைகளை செய்ய முடியாமல் உள்ளதாக கூட்டுறவு உதவி ஆணையாளர் திரு. லிங்கநாதன் தெரிவித்தார். (க)

## வீட்டில் தரித்து நின்ற வானில் பற்றறி திருட்டு

(கொழும்புத்துறை)

யாழ். கந்தர்மடம் பகுதியில் சொந்த வளவுக்குள் இரவு நேரம் நிற்பாட்டப்பட்டிருந்த ஈ. எல். எவ். வானில் இருந்து, வானின் பாவனைக்காகப் பொருத்தப்பட்டிருந்த இரண்டு பற்றறிகளும், வானின் உள்ளேஇருந்த பல தேங்காய்கள் உட்பட வேறு பல பொருள்களும் திருடர்களால் களவாடப்பட்டுள்ளன.

இச்சம்பவம் கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு கந்தர் மடம் இந்து மகளிர் ஒழுங்கையில் நடைபெற்றுள்ளது. வழமைபோல் இரவு வானை நிற்பாட்டி விட்டு விடியற் காலை உரிமையாளர் வந்து பார்த்தபோதே இப் பொருள்கள் இனந்தெரியாத நபர்களால் களவாடப்பட்டமை தெரிய வந்தது.

இப்படியாகக் களவாடப்பட்ட பற்றறிகளின் ஒன்றின் இலக்கம் 1096 என வான் உரிமையாளரால் நல்லூர் பிரதேச தமிழீழ விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி காரியாலயத்தில் அறிவிக்கப்பட்டுள்ளது. (24)

## மாணவர்களுக்கான கூட்டம்

(யாழ்ப்பாணம்)

கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயத்தில் முதலுதவிப் பயிற்சியை முடித்த மாணவர்களுக்கான கூட்டம் நாளை 2 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 3 மணிக்கு அக் கல்லூரியில் நடைபெறும். அனைத்து முதலுதவி மாணவர்களையும் இதில் தவறாது கலந்து கொள்ளுமாறு முறை சாராக் கல்விப் பிரிவுக் கல்வி அதிகாரி ச. சுப்பிரமணியம் கேட்டுள்ளார். (ச)

## மகோற்சவம்

(யாழ்ப்பாணம்)

வண்ணை சிவன் கோயிலில் ஆடிப்பூரத்தேவி மகோற்சவம் வரும் சனிக்கிழமை (3-8-91) மு.ப. 11-30 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து பத்து நாட்கள் நடைபெறவுள்ளன. 11 ஆம், 12 ஆம், 13 ஆம் திகதிகளில் முறையே தேர், தீர்த்தம், பூங்காவனம் நடைபெறவுள்ளது.


## மரண அறிவித்தல்

### திருமதி தங்கமுத்து செல்லையா

புத்தன் செம்பாடு, வதிரியைச் சேர்ந்த திருமதி தங்கமுத்து செல்லையா (31-7-91) புதன்கிழமை காலமானார். அன்னார் காலஞ்சென்ற செல்லையாவின் அன்பு மனைவியும் சிவக்கொழுந்து, மகேஸ்வரி, புவனேஸ்வரி (திட்டமிடல் உத்தியோகத்தர்-கச்சேரி, வவுனியா) பரமேஸ்வரி (ஆசிரியை வட இந்து மகளிர் கல்லூரி) ஆகியோரின் அன்புத்தாயாரும், காலஞ்சென்ற செல்லையா (இளைப்பாறிய அதிபர்) சிவசண்முகம், நடராசா (உதவித் தபாலதிபர், திருக்கோணமலை) சிறீநாதன் (ஆசிரியர் தம்பசிட்டி மெ.மி.த.க பாடசாலை) ஆகியோரின் அன்பு மாமியாரும், ராசதுரை (இளைப்பாறிய அதிபர்) சின்னத்துரை ஆகியோரின் அன்புச் சகோதரியும், செல்வராசா, சயந்தன், ஜயந்தன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

இறுதிக் கிரியைகள் (01-08-1991) வியாழக்கிழமை இன்றுபகல் 12-00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக ஆலங்கட்டை மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக் கொள்கிறேன்.

புத்தன் செம்பாடு, கரணவாய் வடக்கு, கரவெட்டி. (R-1593)

தகவல்: வே. சிறீநாதன் (மருமகன்)




## அவசரகால தாதியர் சேவை

1984ஆம் ஆண்டு தொடக்கம் இன்று வரை கல்வி கற்ற சகல தாதியர்களும் அவசரகால சேவையின் பொருட்டு அழைக்கப்படுகின்றீர்கள். ஆகையினால் சகலதாதியர்களும் 2-8 91காலை பாடசாலையில் சமுகமளிக்குமாறு கேட்டுக் கொள்ளுகின்றேன்.

**Dr. V P. சுந்தரராஜன்**
சாயி மருத்துவக் கல்லூரி
இல. 10, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.
(B-2883)



## 45ஆம்நாள் நினைவஞ்சலி



வவுனியா
நேரடி மோதலில்
வீரமரணமடைந்த
லெப்டினன்ட்
சின்ன சுதா
(வைத்திலிங்கம்
பரமலிங்கம்)

வீர ஜனனம்:
16-12-1968

வீர சொர்க்கம்
18-06-1991

அராலி பெற்றெடுத்த அரும் புதல்வ!
'பாப்பி' என பாசமுடன் அழைத்தோம்
நீ தமிழ் மண்ணை நேசித்தாய் அதனால்
எமை மறைந்தாய் உன் மரணத்தை மறந்தாய்

மண்ணுக்காய் நீ செய்த தியாக கொஞ்சமோ?
மறக்காது உன் நினைவு மாறாது எம் நெஞ்சம்
மாவத்தை விளையாட்டரங்கு பூண்டது உன்பெயர்
பாசத்தால் அன்றோ பாரறியும் அதனை!

எம் நாச்சிமார் அன்னைதலம் அழகுபெற
அன்று அயராது பாடுபட்டாய்
இன்று மாற்றான் படை கலங்க
நன்று போரிட்டு உனை ஈந்தாய்!

சுதா எனும் பெயரோடு களம் அங்கு நின்றாய்
உன் புகழுடலோடு நீ இங்கு வந்தாய்
போகாது போகாது உன்உடல் அன்று நின்றதேனோ?
ஊர்ப்பாசம் அன்றோ இந்நிகழ்வு கண்டோம்!

மாவத்தை விளையாட்டுக் கழகமும்
அராலி தெற்கு சனசமூக நிலையமும்.
அராலி தெற்கு. (R. 1592)



## நினைவு கூருகின்றோம்...

### 1991-08-01

1989 ஆம் ஆண்டு தம்பலகாமத்தில் இந்தியப் படையினருடனான மோதலில் வீரமரணமெய்திய
**கப்டன் ரஜனி** (சி. புஷ்பராஜா - கந்தளாய்)

பொலிகண்டியில் இந்தியப் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட இரு தமிழ் இளைஞர்கள்

1990 ஆம் ஆண்டு வீரமரணமெய்திய
**தினேஷ்** (தம்பிலுவில்)

முல்லைத்தீவில் நிகழ்ந்த வெடிவிபத்தின் காரணமாக எமைப்பிரிந்த
**காண்டீபன்** (சுப்பையா பாலகிருஷ்ணன் - தாவடி)

திருநெல்வேலியில் சிறிலங்கா விமானப்படை விமானங்கள் மேற்கொண்ட குண்டு வீச்சுத்தாக்குதலில் உயிரிழந்த பொதுமகன்

ஆகியோரை இந்நாளில் நினைவு கூருகின்றோம்.

– விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி

(B/ 2881)

### சிந்தனைக்கு

கடமையும் உரிமையும் கொழுகொம்பு போல,
கடமையின்றி உரிமையில்லை;
உரிமையோடு ஒட்டியிருப்பதுதான் கடமை.

— ராஜாஜி


# ஈழநாதம்

31, மகேந்நராவீதி, யாழ்ப்பாணம், 01-08-1991
தொலைபேசி
ஆசிரியபீடம் 025-2839 நிர்வாகபீடம் 5208
த. பெ. எண் 05


## அணிதிரண்டால் வெற்றி நிச்சயம்

கெரில்லா இயக்கமாக உருப்பெற்ற விடுதலைப்புலிகள் இயக்கம் தற்பொழுது மரபுவழி படையணியாக மாறி சிறிலங்கா அரசின் இராணுவத்துடன் பெரும்போரில் ஈடுபட்டுள்ளது. இரு நாடுகளுக்கு இடையிலான யுத்தம் போன்று ஒரு போர் முனையில் மூன்று வாரங்களுக்கு மேலாக நேரடி யுத்தம் நிகழ்ந்து கொண்டிருக்கின்றது.

கெரில்லா யுத்தமுறைக்கும், மரபுவழி யுத்த முறைக்கும் பாரிய வேறுபாடுகள் உண்டு. குறைந்த எண்ணிக்கையினர் தந்திர யுக்திகளைக் கையாண்டு எதிரியின் பலவீனமான பகுதியில் அடித்து மறைந்து விடுவது கெரில்லா யுத்தத்தின் பிரதான பணியாகும் ஆனால் மரபுவழி யுத்தமோ அவ்வாறு இல்லை. உயர்ந்த ஆட்பலத்துடன், நவீனரக ஆயுதங்களுடன் எதிரியின் பலமான பகுதியை மோதி அழிப்பதே மரபுவழி யுத்தமுறையாகும்.

எந்த கெரில்லா அமைப்பும் தமது விடுதலையை வென்றெடுக்க படிப்படியாக மரபுவழி படை அணிகளைக் கொண்டதாக மாறியே ஆகவேண்டியுள்ளது. அப்பொழுது தான் நாட்டின் விடுதலையை வென்றெடுக்க முடியும். இன்று விடுதலைப் புலிகள் அவ்வாறானதொரு மாறல் பருவத்திலேயே உள்ளனர்.

இவ்வாறான மாற்றத்திற்கு ஆயுதபலம் மட்டுமல்ல ஆட்பலமும் அத்தியாவசியமாகின்றது இன்று தொடர்ந்து நடைபெறும் ஆனையிறவு மோதலில் சிறிலங்கா இராணுவம் ஆட்பலத்தின் மூலமே அங்குலம் அங்குலமாக முன்னேறி வருகின்றது சிறிலங்கா இராணுவம் பல வசதிகளைக் கொண்டதாக இருந்தாலும் ஆட்பலம் அதிகமாக இருப்பதே இதற்கு முக்கிய காரணமாகும்.

ஆனையிறவு முகாம் முற்றுகையை முறியடிக்கவென முதலில் தரையிறங்கிய 2000 பேர் கொண்ட சிறிலங்கா இராணுவ அணி விடுதலைப் புலிகளால் சிதறடிக்கப் பட்டது. அந்த இராணுவ அணி களைப்புற்றதால் தொடர்ந்தும் அதனால் போரிட முடியவில்லை. அவ்வணி மாற்றப்பட்டு அதைப்போன்று நான்கு மடங்கு பெரிய இராணுவ அணி யுத்த முனைக்கு அனுப்பப்பட்டது.

ஆனால், புலிகள் தரப்பில் இராணுவ யுக்திகள், செயற்பாடுகள் சிறப்பாகவும் தீவிரமாகவும் இருந்தும் சிறிலங்கா இராணுவத்தினரின் முன்னேற்றத்தை முற்றாகத் தடுத்து நிறுத்த முடியவில்லை. பெரும் சேதத்தை ஏற்படுத்தவே முடிகிறது. சகல வசதிகளும கொண்ட பல்லாயிரக் கணக்கான இராணுவத்துடன் சில ஆயிரம் புலிகள் களத்தில் மோதுகின்றார்கள். அதேவேளை அது கெரில்லாப் போர் முறை அல்ல என்பதால் இழப்புக் களும் தவிர்க்க முடியாததாகின்றது.

தற்பொழுது களத்தில் நிற்கும் போராளி உணவையும், உறவினர்களையும்விட பாராட்டத்தில் மக்களின் பங்கு எந்தளவில் உள்ளது? விடுதலைப் போரில் மக்கள் இணைகின்றார்களா? என்பதை அறிவதிலேயே ஆர்வமாக இருக்கின்றார்கள், எமது ஆட்பலம் அதிகரித்தால் எதிரியை விரட்டி விடலாம் என்பது அவனது கள அனுபவமாகவுள்ளது. மேலும், வீரமரணமடையும் தனது சகாவின் இடத்தையும் தனது இடத்தையும் யாரும் நிரப்பும்போதே தமிழீழ இலட்சியம் நிறைவேறும் என அவன் எண்ணுகின்றான்.

உலகிலேயே மிகவும் பிரபலமான கெரில்லாத் தலைவர் தான் என்பதைத் தலைவர் பிரபாகரன் நிரூபித்துவிட்டார் என பிரபல அரசியல் விமர்சகரும், லங்கா கார்டியன் ஆசிரியருமான மேர்வின் டி சில்வா குறிப்பிட்டுள்ளார். திரு. பிரபாகரனின் வெற்றிகரமான கதை இப்பிராந்தியத்திலே ஒவ்வொரு போராளித் தலைவர்களுக்கும் ''ஒரு மாதிரியாக'' - மொடலாக - தலைவர் பிரபாகரன் விளங்குவார் என்பதையே காட்டுகின்றது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்நிலையில், மிகவும் நுட்பமானதும், திறமையானதுமான போர் முறையைக் கையாளக்கூடிய தலைவர் பிரபாகரன் காலத்திலேயே தமிழீழ மக்கள் தமது பிரதேச இறைமையையும், விடுதலையையும் பெற்றுக் கொள்ளுதல் அவசியமாகின்றது.

மேலும். நாம் சிறுபான்மை இனம். எமது மனித வளம மட்டுப்படுத்தப்பட்டது. இந்நிலையில் போராட்டத்தை நீண்ட காலம் வளர்த்துச் செல்வது பாதகமான நிலைமைகளையே ஏற்படுத்திவிடக் கூடியது.

ஆகையால், தமிழீழப் போராட்டத்தில் மக்கள் எவ்வளவு விரைவில் அணி திரள்கின்றார்களோ அவ்வளவு விரைவில் எமது சுதந்திரம் பெறப்படும். மேய்ப்பனில்லாத ஆடுகள் அல்ல தமிழர் கூட்டம். அங்கீகரிக்கப்பட்ட சிறப்பான தலைமையுண்டு. எவ்வளவு விரைவில் மக்கள் அணி திரள்கின்றனரோ அவ்வளவு விரைவில் விடுதலை நிச்சயம்.

## மரத்திலிருந்து விழுந்து மரணம்

(சுன்னாகம்)

அளவெட்டியில் பனைமரம் ஒன்றில் இருந்து விழுந்து ஒருவர் மரணமடைந்துள்ளார் தெல்லிப்பளை கோவிற் புலத்தைச் சேர்ந்த நீலன் கணேசன் (வயது 31) என்பவரே இவ்வாறு மரணமடைந்தவராவார். (60)

## விவசாயக்கல்லூரி விரிவுரைகள் ஆரம்பம்

(கிளிநொச்சி)

வட்டக்கச்சியில் இயங்கி வரும் விவசாயக் கல்லூரியின் விரிவுரைகள் வரும் திங்கட்கிழமை 5 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது. மாணவர்கள் அனைவரையும் வரும் 4 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை விடுதிக்கு சமுகம் அளிக்குமாறு விவசாயக் கல்லூரி அதிபர் கேட்டுள்ளார்.

## நினைவஞ்சலிக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

கரவெட்டியில் கடந்த மாதம் சிறிலங்கா இராணுவத்தின் எறிகணைத் தாக்குதலால் உயிரிழந்த நெல்லை க. பேரனின் நினைவஞ்சலிக் கூட்டம் வரும் ஞாயிற்றுக்கிழமை 4ஆம் திகதி காலை 9-30 மணிக்கு நல்லூர் கம்பன் கோட்டத்தில் நடைபெற உள்ளது.

இக்கூட்டம் பேராசிரியர் கா. சிவத்தம்பியின் தலைமையில் இடம் பெறவுள்ளது.

## வெற்றிவேண்டிப் பிரார்த்தனை

ஆனையிறவுக் களத்தில் நின்று போராடும் வேங்கைகளுக்கு ஆத்ம பலம் வேண்டியும் காயமடைந்த போராளிகளின் பூரணசுகம் வேண்டியும் வீரமரணமடைந்த வீர வேங்கைகளின் ஆத்ம சாந்திக்காகவும் கோயில்களில் அபிஷேக ஆராதனை வழிபாடுகள் நடைபெறுகின்றன.

கடந்த வெள்ளிக்கிழமை (26-7-91) அரியாலை சித்தி விநாயகர் ஆலயம், கோப்பாய் ஆஸ்பத்திரி வளவில் உள்ள வைரவர் ஆலயத்திலும் கடந்த திங்கட்கிழமை (29-7 91) உடுவில் நாகாம்பாள் கோயில், பூநகரி முனீஸ்வரன் ஆலயம், கிளிநொச்சி கிருஷ்ணபுரம் ஜெப ஆலயம் ஆகியவற்றில் அபிஷேக ஆராதனை வழிபாடுகள் இடம் பெற்றன.

## இன்று

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

மேலும் அவர் போராட்டம் முழுமையாக வெற்றியடைய வேண்டும். தாங்கள் காயமடைந்தாலும், வீரமரணமடைந்தாலும் எம்பின்னால் இருக்கும் எம்மவர்கள் இப்பணியைத் தொடர்வார்கள் என்ற நம்பிக்கையுடனேயே களத்தில் போராடுகின்றனர்.

மேற்கு நாடுகளிலே பதினெட்டு வயதிற்கு மேற்பட்ட அனைவரும் கட்டாய இராணுவப் பயிற்சி பெறுகின்றனர். பலம்குறைந்த வலது குறைந்தவர்கள் மட்டும்தான் அங்கு பயிற்சி எடுப்பதில்லை. இந்நிலை அங்கேயே இருக்கும் போது உயிருக்கு எதிரியால் எந்த நேரமும் ஆபத்திருக்கும் இவ்வேளையில் நாம் போராட்டத்துடன் இனிமேலும் இணையாமல் இருப்பது எமது மண்ணுக்கு மட்டுமல்ல எங்களுக்கு நாங்களே செய்யும் துரோகமாகும் எனக்கூறினார். இக்கருத்தரங்கில் வடமராட்சி மாணவர் அமைப்பு பொறுப்பாளர் மணிவண்ணன் பண்டிதர் பரந்தாமன் ஆகியோரும் உரையாற்றினர். (ச)

## போர்க்காலப் பணியில் தமிழீழ ஆசிரியர் ஒன்றியம்

(யாழ்ப்பாணம்)

போர்க் காலத் தொண்டர் பணிகளில் தமிழீழ தேசிய ஆசிரியர் ஒன்றியம் ஆனையிறவில் அதன் பங்களிப்பினை நேரடியாகவழங்கிவருகின்றது.

ஆனையிறவுப் போரில் 50க்கும் மேற்பட்ட ஆசிரியர்கள் இயக்கச்சி, பளைப் பகுதிகளுக்குச்சென்று போராளிகளுக்குக்களத்தில் உதவும் பலபணிகளை செய்து வருகின்றனர். சுழற்சி முறையில் அடுத்த அணியினர் பணிசெய்யத்தயாராகி உள்ளனர்

கல்வி வளர்ச்சிக்குத் தேசிய விடுதலை அவசியம் என்றும் விடுதலைப் போராட்டத் தொண்டர் பணிகளுக்கு உதவ ஆசிரியர்களை அணிதிரளுமாறும் தமிழீழ தேசிய ஆசிரியர் ஒன்றியம் அறை கூவல் விடுத்துள்ளது.

யாழ். குடா நாட்டிலுள்ள கல்விக் கோட்டங்களில் நிருவாகப் பொறுப்பாளர்களூடாகத் தொண்டர்பணிகளுக்கு இணைந்து கொள்ள ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக ஒன்றியத்தின் செய்திக் குறிப்புத் தெரிவித்துள்ளது.

## இஸ்லாமிய கீதத்திற்கு காவடி ஆட்டம்

நாதஸ்வர ஓசையில் எழுந்த சிங்கார வேலனே தேவா என்ற மெட்டிற்கமைய காவடி எடுப்போர் ஆடியதுடன் கூடவே இறைவனிடம் கையேந்துங்கள் என்ற இஸ்லாமிய பாடலின் மெட்டை நாதஸ்வரம் வெளிப்படுத்திய போது அதற்கேற்பவும் காவடியாட்டம்நிகழ்த்தியுள்ளனர். இது இம்முறை கதிர்காமத் திருவிழாவின் போது இடம் பெற்றது.

வழக்கத்திற்கு மாறாக இம்முறை தமிழ்ப் பக்தர்களின் வருகை கதிர்காமத்திற்கு அதிகரித்துக் காணப்படுவதால் கதிர்காமம் எங்கணும் தமிழ் மணம் கமழ்கின்றதாம். எனினும் கதிர்காமம் செல்லும் சகல வாகனங்களும், பிரயாணிகளின் பொதிகளும், அடையாள அட்டைகளும் பாதுகாப்புப் படையினரால் கடுமையான சோதனைக்கு உள்ளாக்கப்படுகின்றது. அத்துடன் தீவிரபரிசோதனையின் பின்பே விடுதிகளில் தங்க யாத்திரிகர்களை அனுமதிக்குமாறும் எச்சரிக்கையாக இருக்குமாறும் பாதுகாப்புப் படையினரால் அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

### இந்திய நாடாளுமன்றத்தில்

## சாட்சிகள் மரணமாவது குறித்துக் கவலை

ராஜீவ் காந்தி கொலை வழக்கு பற்றிய விசாரணையில் எதையும் மறைக்க வேண்டும் என்ற எண்ணம் அரசுக்கு இல்லை என்று மத்திய உள்துறை இணை அமைச்சர் எம். எம். ஜேக்கப் நேற்று முன்தினம் இதுபற்றி மாநிலங்களவையில் நடைபெற்ற விவாதத்திற்கு பதிலளித்துப் பேசுகையில்குறிப்பிட்டார். இவ்விவாதத்தில் கோவையில் நடந்த குண்டு வெடிப்பில் கொலையுண்டவர்களில் ஒருவர் டிக்சன் என்றும், இவர் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் தேடப்படும் சிவராசனின் நெருங்கிய சகா என்றும் நேற்று முன்தினம் மாநிலங்கள் அவையில் ஜனதா தளம் (எஸ்) உறுப்பினர் யஸ்வன் சின்ஹா குறிப்பிட்டார். அவரது கூற்றை ஆளுங்கட்சி மற்றும் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் ஆதரித்தனர். ராஜீவ் காந்தி கொலை தொடர்பான வழக்கு விசாரணையில் முக்கியமான சாட்சிகள் தொடர்ந்து மரணமடைவது குறித்து மாநிலங்களவை உறுப்பினர்கள் கவலை தெரிவித்தனர். அத்துடன் புலன் விசாரணை நிறுவனங்கள் மீதும் குறை கூறினர். பிரதமர் அல்லது உள்துறை அமைச்சர் சபையில் இன்றே அறிக்கை தாக்கல் செய்யவேண்டும் என்றும் உறுப்பினர்கள் வலியுறுத்தினர்

## அகதிகள் விவகாரத்தில் இந்தி- சிறிலங்கா இணக்கம்

(டில்லி

தமிழகத்திலும், ஒரிசா மாநிலத்திலும் தங்கியிருக்கும் இரண்டு லட்சம் இலங்கைத் தமிழ் அகதிகளை வெகு விரைவில் இலங்கைக்கு அனுப்புவதற்கான திட்டம் குறித்து முடிவு செய்ய இந்தியாவும் சிறிலங்காவும் ஒப்புக் கொண்டுள்ளன.

புதுடில்லிக்கு விஜயம் செய்த சிறிலங்கா வெளியுறவு அமைச்சர் ஹரோல்ட் ஹேரத்துடன் இடம் பெற்ற பேச்சுவார்த்தையின் போது இந்த உடன்பாடு ஏற்பட்டதாக இந்திய வெளியுறவு அமைச்சகம் அறிவித்தது.

இந்தியாவில் எங்கெங்கு இலங்கைத் தமிழ் அகதிகள் எவ்வளவு பேர் தங்கியிருக்கிறார்கள் என்றும் அவர்கள் இலங்கையின் எந்த எந்தக் கிராமத்தைச் சேர்ந்தவர்கள் என்ற முழு விபரங்களும் ஹேரத்திடம் அளிக்கப்பட்டதாகவும் இவர்களை பாதுகாப்பாகவும் விரைவாகவும் உரிய இடங்களில் குடியமர்த்த வசதியாக இந்த விபரங்களை அளித்ததாகவும் இந்திய வெளியுறவு அமைச்சகம் தெரிவித்தது.

இலங்கைத் தமிழ் அகதிகள் திரும்பிச் செல்வதற்கான கால வரையறை எதுவும் நிர்ணயிக்கப்படவில்லை என்றும் அதே சமயத்தில் அவர்கள் தாங்களாக தாயகம் திரும்பிச் செல்லவேண்டும்என்றும்வெளியுறவு அமைச்சகம்தெரிவித்தது

## முழங்காவிலில் மக்கள் அஞ்சலி

ஆனையிறவு இராணுவ முகாம் மீது விடுதலைப் புலிகள் தாக்குதல் நடாத்திய போது வீரமரணமடைந்த சிகாணு (முழங்காவில்) வின் புகழுடல் திங்களன்று முழங்காவிலில் மாவீரர் கலையரங்கில் அப்பகுதி மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டிருந்தது.

இந்த அஞ்சலி நிகழ்ச்சியில் பெருந்தொகையான பொது மக்கள் பங்குபற்றினர். [71]

## இளம் பெண் காயம்

தச்சன்காட்டுப் பகுதியில் நிலைகொண்டுள்ள சிறிலங்கா இராணுவத்தினர் மக்கள் குடியிருப்புப் பகுதிகளை நோக்கி கடந்த செவ்வாய் மாலை தொடர்ச்சியாகத் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர்.

இதில்கொல்லன்கலட்டியை சேர்ந்தஎஸ். ஜெயந்தி (வயது 24) காயமடைந்தார். இவர் தற்போது சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (க(

# காங்கிரஸ் அ.தி.மு.க. உறவை குறைக்க வேண்டாம்

எம். பழனியாண்டி

(சென்னை

இந்திரா காங்கிரஸ் கட்சிக்கும் அ.இ அ. திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும் இடையே உள்ள சுமுகமான உறவைக் குறைக்கக் கூடிய எந்த நிலைமையையும் ஏற்படுத்த வேண்டாமென்று பாராளுமன்ற உறுப்பினரும், தமிழ்நாடு காங்கிரஸ் கட்சியின் முன்னாள் தலைவருமான எம். பழனியாண்டி அ இ. அ. திராவிட முன்னேற்றக் கழகத்தைக் கேட்டுக் கொண்டிருக்கிறார்.

நேற்று முன்தினம் சென்னையில் வெளியிட்ட அறிக்கை ஒன்றில் மத்திய அமைச்சர் ரங்கராஜன் குமாரமங்கலத்தைக் காவிரிப் பிரச்சினையில் ராஜினாமாச் செய்ய வேண்டாம் என்றும், அதே சமயம் அமைச்சர்கள் சிதம்பரமும் அருணாசலமும் பதவி விலக வேண்டும் என்று கேட்டது விநோதமாக இருக்கிறது என்று தெரிவித்திருக்கிறார். அரசியல் உள் நோக்கத்திற்காக இத்தகைய பாரபட்சப் போக்கைக் காட்டலாகாது என்று அவர் அ. இ. அ. திராவிட முன்னேற்றக் கழகத்தை கேட்டுக் கொண்டிருக்கிறார்.

# ஜனாதிபதியின் மனுவை உச்ச நீதிமன்றம் ஏற்றது

(டில்லி)

காவிரி ஆற்று நீர் பங்கீட்டுப் பிரச்சினையில் எழுந்துள்ள அரசியல் சாசனப்பிரச்சினை பற்றி உச்ச நீதி மன்றத்தின் கருத்தை அறிய ஜனாதிபதி ஆர். வெங்கடராமன் அனுப்பிய மனுவை ஏற்றுக் கர்நாடகா, தமிழ்நாடு, கேரளம், புதுச்சேரி யூனியன் பிரதேசம் ஆகியவற்றிற்கு உச்ச நீதி மன்றம் அழைப்பாணை அனுப்பியுள்ளது.

இன்னும் ஹெரியானா, ராஜஸ்தான், மத்தியப் பிரதேசம், பஞ்சாப் ஆகியவற்றையும் இந்த வழக்கின் விசாரணையில் சேர்க்க வேண்டும் என்ற மத்திய அரசின் கோரிக்கையை உச்ச நீதிமன்றத்தில் மூன்று உறுப்பினர்கள் நிராகரித்துள்ளனர்.

ஆகஸ்ட் 12 ஆம் திகதியன்று விசாரணை நடைபெறும்.

தமிழ் நாட்டுக்கு 205 கோடி கன அடி நீரைத் திறந்து விட வேண்டும் என்ற காவிரி நடுவர் மன்றத்தின் தீர்ப்பு நியாயமனதுதானா என்ற கர்நாடக அரசின் கோரிக்கையும் வழக்கில் சேர்த்துக் கொள்ளப்பட வேண்டும் என்ற மனு நிராகரிக்கப்பட்டது.

## சென்னையில் 1990 செப்டம்பரில்

# பல அரசியல் தலைவர்களை கொலை செய்ய முயற்சி?

(சென்னை)

சென்னையில் கடந்த ஆண்டு செப்டம்பர் மாதம் நடைபெற்ற தேசிய ஒருமைப்பாட்டுக் கூடடத்தில் கலந்து கொண்ட பல்வேறு அரசியல் கட்சித் தலைவர்களைக் கொல்லும் நோக்கத்துடன் தீவிரவாதக் குழுவொன்றினால் வெடிகுண்டு வைக்கப்பட்டத்தைக் குறித்து தமிழக பொலிஸ் புலனாய்வுத்துறை புலன்விசாரணை செய்து வருகிறது. இத் தகவலை கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையில், ராஜ்ய சபையில் மத்திய உள்துறை இணை அமைச்சர் ஜேக்கப் தெரிவித்தார்.

ஐந்து லீற்றர் கொள்கலன் ஒன்றில் ஜெயற்றின் குச்சுகள் நிரப்பப்பட்டு இவற்றோடு குறித்த காலத்தில் செயற்படக் கூடிய மின் கருவி ஒன்று பொருத்தப்பட்டிருந்ததாக பொலிஸார் கண்டுபிடித்ததாக அமைச்சர் தெரிவித்தார்.

## வடக்கு - கிழக்கில் ஜனசவிய நிறுத்தம்

(கொழும்பு)

ஜனசவிய திட்டங்கள் வடக்குக் கிழக்கில் செயற்படுத்தக் கூடிய நிலை இன்றில்லை என்று ஜனசவிய ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

வடக்குக் கிழக்கு மாகாணங்களில் அமைதி நிலை திரும்பிய பின்னர் ஜனசவிய சம்பந்தப்பட்ட அத்தனை திட்டங்களும் முழுமையாக நடத்தப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

# சோழனின் புகழுடம்புக்கு மக்கள் அஞ்சலி

நமது நிருபர்)

ஆனையிறவில் சிறிலங்கா இராணுவத்துடன் நடைபெறும் நேரடி மோதலில் நேற்றுப் புதன்கிழமையன்று வீரமரணத்தைத் தழுவிக் கொண்ட வீரவேங்கை சோழன் (மணிக்கராசா சிறிசங்கர் ஈச்சந்தீவு, ஆலங்கேணி) புகழுடல் நேற்று பாஷையூர் புனித அந்தோனியார் மகளிர் வித்தியாலய மண்டபத்தில் மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டிருந்தது. பெருமளவில் மக்கள் அஞ்சலி செலுத்தினர்.

இங்கு நடைபெற்ற அஞ்சலிக் கூட்டத்தில் விடுதலைப் புலிகள் மூத்த உறுப்பினர் தேவர் அண்ணா உபட ரஞ்சன் மாஸ்டர் மோகன் ஆகியோர் அஞ்சலியுரை நிகழ்த்தினர். பின்னர் புகழுடல் கோப்பாய் மாவீரர் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு அங்கு தீயுடன் சங்கமித்தது, (43) (ச)

# நோயாளர் நேரடியாக வந்தாலே மருந்து

(யாழ்ப்பாணம்)

நோயாளர் நேரடியாக வந்தால் மட்டுமே அவர்களுக்கான மருந்துகள் வழங்கப்படுமென தெல்லிப்பளை அரசினர் மருத்துவமனை அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இதுவரை காலமும் நோயாளர் சார்பில் உறவினர் யாராவது வந்தால் அவர்களுக்கான மருந்துகள் கொடுக்கப்பட்டன ஆனால் இனிமேல் அப்படி வழங்க முடியாது என தெரிவிக்கப்பட்டதனால் தற்போது நோயாளரே நேரடியாக வந்து பெற்றுக்கொள்ள வேண்டியுள்ளது.

இதனால் சலரோகம் போன்ற சடும் நோயாளர்களும் போக்குவரத்து சீரின்மையால் மிகுந்த சிரமத்திற்குள்ளாவதாக நோயாளி ஒருவர் தெரிவித்தார் (ச

## போர்க்காலக் கருத்தரங்கு

இன்றைய போர்க்கால சூழ்நிலையை ஒட்டி யாழ். இந்துக் கல்லூரியின் உயர்தர மாணவர் ஒன்றியத்தினால் போர்க்காலக் கருத்தரங்கு ஒன்று ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. இக் கருத்தரங்கு நாளை (வெள்ளிக்கிழமை) காலை 10 மணிக்கு யாழ். இந்துக் கல்லூரியில் நடைபெற உள்ளது. விடுதலைப் புலிகளின் முக்கியஸ்தர்கள் கலந்து கொள்ளும் இக்கருத்தரங்கில் சகல பாடசாலைகளின் உயர்தர வகுப்பு மாணவர்கள் அனைவரையும் பங்குபற்றுமாறு உயர்தர மாணவர் ஒன்றியத்தினர் வேண்டுகின்றனர்.

# அரசியல் சாசனத்தை அமைச்சர்கள் மீறினர்

(டில்லி)

அண்மையில் அயோத்தி சென்ற அமைச்சர்கள் அரசியல் சாசன நெறிமுறைகளை மீறியிருப்பதாகக் கூறி எதிர்க் கட்சியினர் நேற்றுச் சபை நடவடிக்கைகளைப் புறக்கணித்தனர்.

இதேவேளை, இரசாயன உரம் மீதான விவாதத்தின் போதும் நேற்று இரு சபைகளிலும் பெரும்பாலான எதிர்க் கட்சி உறுப்பினர் வெளிநடப்புச் செய்தனர்.

கேள்வி நேரம் முடிந்தவுடனேயே இந்த இரு சபைகளிலும் கூச்சலும், குழப்பமும் நிகழ்ந்தன.

சமஜவாதி ஜனதாக் கட்சி உறுப்பினர் ஒருவர் சபை நடுவே வந்து அமர்ந்து மறியல் போராட்டம் நடத்தினார். விவசாயிகளுக்கு உதவுவது தொடர்பாக அரசினரிடமிருந்து உடன்பதில் கிடைத்தாக வேண்டும் என்று அவர் கோரி இந்தக் கிளர்ச்சியை நடத்தினார்.

# ஆயுத குறைப்பு ஒப்பந்தம் புஷ் - கொர்பி கைச்சாத்து

(மாஸ்கோ)

மாஸ்கோ உச்சி மாநாட்டின் இரண்டாவது நாளான நேற்று ஜனாதிபதி கொர்பசேவும், அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ்ஷும் ஆயுதக் குறைப்பு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டார்கள்.

நீண்ட தூரம் பாய்ந்து தாக்கும் அணுசக்தி ஏவுகணைகளைக் குறைக்கும் திட்டம் இது ஒப்பந்தம் உலக முக்கியத்துவம் வாய்ந்தது என்று சோவியத் ஜனாதிபதி கூறினார். அரை நூற்றாண்டின் அவநம்பிக்கையைப் போக்கும் இந்த ஒப்பந்தம், இரு நாடுகளுக்கும் இடையிலான புதிய உறவுக்குச் சான்று என்றார் ஜனாதிபதி புஷ்.

பத்து ஆண்டுகளாக நடைபெற்ற பேச்சுவார்த்தைகளின் முடிவில் ஏற்பட்ட இந்த ஒப்பந்தம், இரு வல்லரசுகளின் ஆயுதச் சேமிப்பின் மூன்றில் ஒருபகுதியை குறைத்துவிடும்.

சோவியத் அதிபர் மிகைல் கொர்பசேவும், அமெரிக்க அதிபர் ஜோர்ஜ் புஷ்ஷும் இந்த உடன்பாட்டில் கையெழுத்திடுவதற்குப் பயன்படுத்திய பேனாக்கள் தற்போது அழிக்கப்படவிருக்கும் ஏவுகணை ஆயுதங்களின் உலோகத்தில் இருந்து தயாரிக்கப்பட்டவை என்பது குறிப்பிடத்தக்கது.

## தேசபக்தர் தேவருக்கு வீரவணக்கம்

(நமது நிருபர்)

ஆனையிறவு யுத்தத்தில் சிறிலங்கா விமானப்படையின் விமானக் குண்டு வீச்சில் சிக்கி நேற்று முன்தினம் தேசபக்தரான தேவர் (சிவஞானம் சிறியானந்தம், கல்வளை சண்டிலிப்பாய்) என்பவர் வீரமரணத்தை தழுவிக் கொண்டுள்ளார் அவருக்கு விடுதலைப் புலிகள் வீர வணக்கம் செலுத்தியுள்ளனர்.

**20 நாள்**

உணவுப் பொருள்களை எடுத்துச் செல்லவே அரசு அனுமதி மறுத்து வருவதால் குழந்தைகள் பலர் மடியும் நிலையேற்பட்டிருப்பதாகவும், குழந்தைகள் மனநிலை ரீதியாகப்பெரிதும் பாதிக்கப்படும் நிலை ஏற்பட்டிருப்பதாகவும், இவற்றிற்கு அரசே முழுப்பொறுப்பு என்றும் கூறப்பட்டுள்ளது

அத்துடன் அரசு இந்தச்சூழ்நிலையைத் திட்டமிட்டு உருவாக்குவதாவும், விமானக் குண்டுவீச்சுக்கு அஞ்சி வாழும் நிலையுடன், பட்டினியும், உணவுப் பொருள்கள் இன்மையும், பணப்புழக்கமின்மையும், வேலைக்காக வெளியில்செல்ல முடியாத நிலை இருப்பதாகவும் அக்கட்சி கூறியுள்ளது

**இந்தியா**

தியாவும், சிறிலங்காவும் ஒரே ஆபத்துக்களை எதிர் நோக்குவதால் பொதுவான எதிர் நடவடிக்கைகள் தேவை எனத் தெரிவித்தார்.

**இராணுவம்**

பட்டது. இதைத்தொடர்ந்து சிலாவத்துறை இராணுவமுகாமில் இருந்து சுமார் 75 இற்கும் மேற்பட்ட சிறிலங்கா இராணுவத்தினர் வெளியேறி முன்னேற முயன்றபோது விடுதலைப் புலிகள் ''அருள் 89'' ஆயுதங்களைப் பயன்படுத்தி கடும் தாக்குதலைத் தொடுத்தனர் இத்தாக்குதலைத் தொடர்ந்து இராணுவத்தினர் முன்னேற முடியாது முகாமுக்குத் திரும்பி விட்டனர்.

**யுத்த**

கென முந்நூறு உழவு இயந்திரங்கள் கப்பல் மூலமாக வெற்றிலைக் கேணி கரையோரத்துக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளது என்றும் அந்த அமைச்சு தெரிவித்தது.

**77 லட்சம்**

பெறுமதியான தங்கத்தையும், மற்றும் சில பொருள்களையும் கடத்திச் செல்ல முற்பட்ட இருவர் சிறிலங்கா சுங்கப் பகுதியினரிடம் சிக்கிக் கொண்டுள்ளனர். சுங்கப் பகுதியினர் நேற்றுக் கைப்பற்றியபொருள்களில் ஒவ்வொன்றும் அரைக் கிலோ எடையுடைய எழுபது தங்கத் துண்டுகள், ஆயிரத்து எழுநூற்று தொண்ணூற்று ஆறு சிற்றிசன் கைக்கடிகாரங்கள் இரண்டாயிரம் படச்சுருள்கள், கசற்றுகள் என்பன அடங்கியுள்ளன.

**பரீட்சை**

காகிதாதிகள் வவுனியாவை மையமாகக் கொண்டு செயற்படும் பரீட்சை இணைப்பதிகாரியால் வவுனியாக் கல்வித் திணைக்களம்வரை எடுத்து வரப்பட்டுள்ளதாக வவுனியாக் கல்வித் திணைக்களப் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

வினாத்தாள்களையும், ஏனைய பரீட்சை தொடர்பான காகிதாதிகளையும் யாழ்ப்பாணம் கொண்டு வர யாழ் கல்வித் திணைக்களத்தினால் முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. இது தொடர்பாக நேற்று யாழ். பிரதேச கல்விப் பணிப்பாளர் யாழ் அரசாங்க அதிபருடன் தொடர்பு கொண்டுள்ளார்,

முல்லைத்தீவு, கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களுக்கான வினாத்தாள்களும் நேற்று வரை உரிய பரீட்சை அதிகாரிகளிடம் கையளிக்கப்படவில்லை. இதேவேளை மன்னாருக்கான பரீட்சை வினாத்தாள்கள் கையளிக்கப்பட்டுள்ளன.

வினாத்தாள்கள் கிடைக்கும் பட்சத்தில், நடந்து முடிந்த பாடங்களைக் கைவிட்டு, ஏனைய பாடங்களுக்கான நேரசூசிகையின் படியே மிகுதிப் பரீட்சை நடத்தப்படவுள்ளதாகத் தெரிய வருகின்றது.

**புதுகாட்டுச்**

பல தென்னை மரங்கள் கூடப் பச்சையாகவே எரிந்து கொண்டிருந்தன. இப்பகுதியில் தொடர்ந்தும் இடைவிடாது பொம்மர்களும், உலங்கு வானூர்திகளும், அவ்ரோ மற்றும் வை-12, வை-8 விமானங்களும் தாக்குதல்களை நடத்தி வருகின்றன

**2 கிலோ**

இருக்கும் படையினரோடு வானொலித் தொடர்பு ஏற்படுத்தப்பட்டிருப்பதாகவும் உத்தியோகபூர்வ வட்டாரங்களை மேற்கோள்காட்டி ரூபவாஹினி நேற்றிரவு தெரிவித்தது.

## மரண அறிவித்தல்

### திரு. V. M. கணபதிப்பிள்ளை

(வி. எம் கே. அன் சன்ஸ் உரிமையாளர்)

சாவகச்சேரியைச் சேர்ந்த பிரபல வர்த்தகர் வி எம் கணபதிப்பிள்ளை காலமாகி விட்டார். இவர் காலஞ்சென்ற சாந்தநாயகம் பராசக்தியின் அன்புக் கணவரும், சிவபாக்கியம், ஜெயலட்சுமி, புலேந்திரன், குலேந்திரன், சீதாலட்சுமி, ராதாலட்சுமி ஆகியோரின் தகப்பனும், காலஞ்சென்ற பாடசாலை அதிபர் க செல்லத்துரை, சி தர்மேந்திரன் (தொழில் நுட்ப உத்தியோகத்தர்), யேசுதாசன் (பொறியியலாளர் கனடா), அ. வசந்தகுமார் (பொறியியலாளர் சவுதி), நிர்மலராணி, திலகமதி ஆகியோரின் மாமனும், அகல்யா (விஞ்ஞான பீடம் யாழ் வளாகம்), கௌசல்யா, லாவண்யா, மீரா (வேம்படி மகளிர் கல்லூரி மாணவிகள்) பார்த்திபன் (பரியோவான் கல்லூரி), மாதங்கி, பிரசாந், கோகுல், கார்த்திகா, அபராஜிதன், மேனகா, ரேகா, கல்பனா, ஆதித்தன் ஆகியோரின் பேரனுமாவார்

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 01-08-91 (இன்று) மாலை 4 மணியளவில் நடைபெற்று சாலை வடக்கு மயானத்தில் அடக்கம் செய்யப்படும். இத்தகவலை உற்றார் உறவினர், நண்பர்கள், வாடிக்கையாளர்கள் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

சரசாலை தெற்கு,
சாவகச்சேரி.

தகவல்:
க. புலேந்திரன் மகன்)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31 ஆம் இலக்கத்திலுள்ள ''ஈழநாதம்'' பணிமனையில் 1991 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 01 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.